S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வெள்ளி நவம்பர் 28 * 2025 * மலர் -1 * இதழ்-180* VOL-1 * ISSUE-180 விலை ரூ.3 * பக்கம் -4

### 48—வது பிறந்தநாள் விழா:

# பெரியார், அண்ணா, கருணாநிதி நினைவிடங்களில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மரியாதை!

## ✸ குடும்பத்தினருடன் கேக் வெட்டி கொண்டாட்டம்; ✸ நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்!!





**சென்னை,நவ.28**

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தனது 48–வது பிறந்தநாளை இன்று கொண்டாடினார். இதையொட்டி பெரியார், அண்ணா, கருணாநிதி நினைவிட ங்களில் மரியாதை செலுத்தினார். முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர்கள், கூட்டணிக் கட்சி தலைவர்களும் அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

தி.மு.கஇளைஞர்அணி செயலாளரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலினின் 48–வது பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. இதையடுத்து இன்று காலை ஆழ்வார்ப்பேட்டையில்தனது தந்தையும், முதல்வருமான மு.க.ஸ்டாலின், தாயார் துர்கா ஸ்டாலின் ஆகியோரிடம் ஆசி பெற்று குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் கேக் வெட்டி கொண்டாடினார்.

அதன்பிறகு மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா, கருணாநிதி நினைவிடங்களுக்கு சென்று மலர்தூவி மரியாதை செலுத்தினார். பின்னர், நினைவிடத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மேலும், வேப்பேரியில் உள்ள பெரியார் திடலுக்கும் சென்று மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில், அமைச்சர்கள் பி.கே.சேகர் பாபு, அன்பில் மகேஸ், டி.ஆர்.பி. ராஜா மற்றும் தி.மு.க.வினர் ஏராளமானோர் பங்கேற்றனர்.

அதன்பிறகு, அடையாறு குறிஞ்சி இல்லத்தில் கட்சி நிர்வாகிகள், முக்கிய பிரமுகர்களை சந்தித்தார். அப்போது அவர்கள் முன்னிலையில் கேக் வெட்டி பிறந்தநாளை கொண்டாடினார்.

தொடர்ந்து புத்தகங்கள், கருப்புசிவப்பு வேட்டிகள், மகளிர் சுயஉதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருள்களைக் கொடுத்து தி.மு.க.வினர் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர். இந்நிகழ்ச்சிக்கு சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு உட்பட பல்வேறு மாவட்டங்களில் இருந்து கட்சி நிர்வாகிகள் வருவதால் கூட்ட நெரிசல் மற்றும் போக்குவரத்து பாதிப்பு ஏற்படாமல் இருக்கும் வகையில் தடுப்புகள் அமைத்து நெரிசலை தவிர்க்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. 50 ஆயிரத்துக்கும் அதிகமான தொண்டர்கள் வாழ்த்து கூற வருகை தந்ததால் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.உதயநிதி ஸ்டாலினுக்கு, அமைச்சர்கள், கூட்டணி கட்சித் தலைவர்கள் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.

மேலும், உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழாதமிழகம்முழுவதும் தி.மு.க.வினர் நலத்திட்ட உதவிகளை வழங்கி கொண்டாடினர்.

தி.மு.க ஆட்சியை மலரச் செய்ய உழைப்போம் துணை முதல்வர் எக்ஸ் தளத்தில் கூறியதாவது:

ஆதிக்கவாதிகளிடம் குவிந்திருந்த அதிகாரத்தை சாமானிய மக்களிடம் கொண்டு சேர்த்த தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினை விடத்தில் நமது பிறந்த நாளில் மரியாதை செலுத்தினேன். பேரறிஞர் அண்ணா வழியில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காப்போம். மாநில உரிமைகளையும் சமூக நீதியையும் நிலைநா ட்டுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

மற்றொரு பதிவில்," நவீன தமிழ்நாட்டின் சிற்பி நம் நெஞ்சமெல்லாம் நிறைந்தி ருக்கும் முத்தமிழறி ஞர் கலைஞர் நினைவிடத்தில் நம் பிறந்த நாளையொட்டி மரியாதை செலுத்தினோம். அங்குள்ள பணியாளர்களுக்கு நலத்திட்டங்களை வழங்கி அவர்களின் வாழ்த்துகளைப் பெற்றுக் கொண்டோம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காட்டிய பாதையில், அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தலைவர் ஸ்டாலின் தலைமையில் திராவிட மாடல் 2.0 ஆட்சியை மலரச் செய்ய அயராது உழைப்போம் என்று கூறியுள்ளார்.



கமல்ஹாசன் வாழ்த்து

மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து, தனது எக்ஸ் தளத்தில் கூறியதாவது :

தமிழ்நாடு துணை முதல்வர், எப்போதும் இனியவர், என் அன்பிற்குரிய இளவல் உதயநிதி ஸ்டாலின் நீடு வாழ்க. பொன்றாப் புகழுடனும் குன்றாப் பெருமையோடும் நிலைத்து வளர்க.

இவ்வாறு கூறியுள்ளார்.

# இலங்கை அருகே உருவான காற்றழுத்தம் புயலாக மாறுகிறது!

## தமிழகத்தில் கனமழை பெய்யும் என்பதால் மாவட்ட ஆட்சியர்களுடன் முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை!!

**சென்னை, நவ.27**

தென் கிழக்கு வங்கக்கடலில் இந்தோனேசியா அருகே உருவான சென்யார் புயல் உடனடியாக வலுவிழந்து கிழக்கு திசையை நோக்கி சென்று விட்டது. இதனால் தமிழ்நாட்டுக்கு எந்தப்பயனும் இல்லை. அதே நேரத்தில் இலங்கை அருகே உருவான காற்றழுத்தம் இன்று புயலாக உருமாற உள்ளது. ஆகவே மாவட்ட ஆட்சியர்களுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவசர ஆலோசனை நடத்தினார்.

தமிழ்நாட்டில் அக்டோபர் 16–ஆம் தேதி வடகிழக்கு பருவமழை தொடங்கியது. தொடக்க காலத்தில் மட்டும் பரவலாக மழை பெய்தது. மற்றபடி எதிர்பார்த்த அளவு மழை இல்லை. நீண்ட நாள் ஓய்வு எடுத்துக் கொண்டது. இந்த நிலையில்



கடந்த வாரம் இறுதியில் வங்கக்கடலின் தென்கிழக்கு மூலையில் குறைந்தகாற்றழுத்ததாழ்வுநிலை உருவானது. இது தொடக்கத்தில் மேற்கு – வடமேற்கு திசையில் நகர்ந்து வந்தது.

இதே திசையில் நகர்ந்து வந்தால் அது தமிழகத்தை நோக்கி நேரடியாக வரும். அந்த தாழ்வு நிலை நேற்று புயலாக மாறியது. இதற்கு சென்யார் என பெயர் வைக்கப்பட்டது.

பொதுவாகவே புயலானது வடமேற்கு திசையில் நகரும் அல்லது வடக்கு திசையை நோக்கிச் செல்லும். ஆனால் இந்தப் புயல் தலைகீழ் திருப்பமாக கிழக்கு – தென்கிழக்கு திசையை எதிர்ப்பக்கம் திரும்பி விட்டது. இதனால் தமிழ்நாட்டுக்கு எந்த நன்மையும் கிடைக்காது.

அதே நேரத்தில் இலங்கை அருகே 2 தினங்களுக்கு முன்னர் இன்னொரு புயல் சின்னம் உருவானது. அது இன்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது. அடுத்த 12 மணி நேரத்திற்குள் புயலாக உருமாறிவிடும் என கணிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புயல் சின்னம் தற்போது இலங்கையையொட்டி நிலை கொண்டுள்ளது. இது வடக்கு – வட கிழக்கு திசையில் மணிக்கு 8 கி.மீ. வேகத்தில் நகர்ந்து கொண்டிருக்கிறது.

இதன் காரணமாக அடுத்த சில தினங்களில் தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநிலங்களில் மிக பலத்த மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக தமிழ்நாட்டில் 29, 30 ஆகிய தேதிகளில் மிக கனமழை பெய்யும்.

ஆகவே முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சியர்களுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று அவசர ஆலோசனை நடத்தினார்.



சேலம் குகை நகரவை மேல்நிலைப்பள்ளியில் கலெக்டர் பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் மாணவிகளுக்கு மிதிவண்டிகளைவழங்கினார். அருகில் முன்னாள்எம்.எல்.ஏ.தனபால், பகுதிசெயலாளர்கள் சரவணன், ஜெகதீஷ், கவுன்சிலர் மோகன பிரியா உள்பட பலர் உள்ளனர்.

# பள்ளிக்கு சென்ற ஆசிரியை சரமாரி குத்திகொலை!

## வேறொருவருடன் நிச்சயம் செய்த்தால் காதலன் வெறிச்செயல்!!

**தஞ்சை.நவ,28**

தஞ்சை அருகே உள்ள மாரியம்மன் கோவில் மேல கலகுடி பகுதியை சேர்ந்த புண்ணிய மூர்த்தி இவருடைய மகள் காவியா( ) காவியா ஆலங்குடி அரசு தொடக்கப் பள்ளியில் தற்காலிக ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். இவருக்கும் அதே பகுதியை சேர்ந்த கருணாநிதி மகன் அஜித்குமார்(வயது29) என்பவருக்கும் கடந்த 13 வருடங்களாக காதலித்து வந்துள்ள னர். இந்நிலையில் காவியாவின் பெற்றோர் அவருடைய அத்தை மகனுக்கு திருமண நிச்சயதார்த்தம் செய்து வைத்துள்ளனர். காவியா இவ்விவரத்தை அஜித்குமாருக்கு தெரிவிக்காமல் அவருடன் பேச்சுவார்த்தையில் இருந்துள்ளார். அதேபோல





நேற்று 261125ஆம் தேதி இரவு 8 மணிக்கு காவியா அஜித் குமாருடன் இருவரும் வீடியோ காலில் பேசி உள்ளார்.அப்போது நிச்சயதார்த்தம் செய்த விபரம் அப்போது எடுக்கப்பட்ட போட்டோ ஆகியவற்றை காண்பித்துள்ளார். இதனால் கோபமடைந்த அஜித்குமார் இன்று காலை காவியா பள்ளி செல்ல கொத்தட்டை பகுதி அருகே இருசக்கர வாகனத்தில் வந்த போது .அவரை வழி மறைத்து காவியாவிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். அப்போது ஆத்திரம் அடைந்த அஜீத்குமார் தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் அவரை மண்டையில் பல இடங்களில் தாக்கி கொலை செய்துவிட்டு தப்பித்துள்ளார். இது குறித்து தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடம் விரைந்து சென்று விசாரணை செய்து மறைந்து இருந்த அஜுத்குமாரை கைது செய்துள்ளனர். சம்பவ இடத்தில் பாபநாசம் துணை காவல் கண்காணிப்பாளர் அம்மாபேட்டை காவல் ஆய்வாளர் ஆகியோர் விசாரணை செய்து வருகின்றனர்.



காரியாபட்டியில் நடைபெற்ற மகளிர் தொழில் பயிற்சி முகாமில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பார்வையிட்டார்.



சுருளி அருவியில் நீர் வரத்து சீரானதால் சுற்றுலாப்பயணிகள் குளிப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

### திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில்

# பாலின சமத்துவத்திற்கான தேசிய அளவிலான பிரச்சாரம் குறித்து விழிப்புணர்வு!

## கலெக்டர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!!



திருப்பத்தூர்.நவ26

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் பாலினசமத்துவத்திற்கான தேசிய அளவிலான பிரச்சாரம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் சிவசௌந்தரவல்லி தலைமையில் நடைபெற்றது. பாலின சமத்துவம் குறித்த உறுதிமொழியினை ஆட்சியர் தலைமையில் அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து சுமார் 200க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களை சேர்ந்த பெண்கள் பங்கு பெற்ற பாலின சமத்துவத்திற்கான தேசிய அளவிலான பிரச்சாரம் குறித்த விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் கொடியசைத்து துவக்கி வைத்தார் . இப்பேரணியில் பாலினசமத்துவம்குறித்துவிழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தி வாசகங்களை முழங்கியவாறு பேரணியில் பங்கேற்றனர்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில்துவங்கிய பேரணி முக்கிய சாலை வழியாக தூய நெஞ்ச கல்லூரி வரை சென்று நிறைவடைந்தது. பாலின சமத்துவத்திற்கான தேசிய அளவிலான பிரச்சாரம் இன்று முதல் டிசம்பர் 23ஆம் தேதி வரை நடைபெற உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து மாவட்ட குடும்ப நல செயலகம் சார்பில் ஆண்களுக்கான நவீன குடும்ப நல கருத்தடை சிகிச்சை இரு வார சிறப்பு முகாம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒலிபெருக்கியுடன் கூடிய விழிப்புணர்வு வாகனத்தை மாவட்ட ஆட்சியர் கொடியசைத்து துவக்கி வைத்தார். கடந்த 21 ஆம் தேதி துவங்கிய இம்முகாம் வரும் டிசம்பர் 4ஆம் தேதி வரை திருப்பத்தூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மற்றும் அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெற உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குனர் விஜயகுமாரி , துணை இயக்குனர் குடும்ப நல செயலகம் , துறை சார்ந்த அரசு அலுவலர்கள் மற்றும் பலர் பங்கு பெற்றனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோயம்புத்தூர், காந்திபுரம் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் 165 ஏக்கர் பரப்பளவிலான செம்மொழிப் பூங்காவிற்கு, முதற்கட்டமாக 45 ஏக்கர் பரப்பளவில் 208.50 கோடி ரூபாய் செலவில் உலகத்தரத்தில் பல்வேறு நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள செம்மொழிப் பூங்காவினை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார், ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், நகராட்சி நிருவாக இயக்குநர் பமதுசூதன் ரெட்டி, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க. கிரியப்பனவர், கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி.காரங்கநாயகி ராமச்சந்திரன், ஆணையர் மா.சிவகுரு பிராபாகரன், , துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### டிராய் கடந்த ஒரு ஆண்டில்

# 21 லட்சத்திற்கும் மேல் மோசடி மொபைல் எண்களின் மீதும், சுமார் 1 லட்சம் நிறுவனங்களின் மீதும் நடவடிக்கை!

சென்னை, நவ.28–

இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (டிராய்) சமீபத்தில் வெளியிட்ட ஆலோசனையில், ஸ்பாம் அழைப்புகள் மற்றும் செய்திகளைTRAIDNDசெயலியில்பதிவு செய்வது அவசியம் என்றும், தனிப்பட்ட சாதனத்தில் எண்களைத் தடை செய்வது போதாது என்றும் தெரிவித்துள்ளது. டிராய், தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களுடன் இணைந்து, ஸ்பாம் மற்றும் மோசடி முயற்சிகளை கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. கடந்த ஆண்டு, TRAIDND செயலியில் மக்கள் செய்த புகார்களின் அடிப்படையில், 21 லட்சத்திற்கும் மேற்பட்ட மோசடி மொபைல் எண்கள் மற்றும் சுமார் ஒரு லட்சம் நிறுவனங்கள் மீது இணைப்பைத் துண்டித்தல் மற்றும் பிளாக் செய்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### ராசிபுரத்தில் கத்தியுடன் ரகளை:

# 3 வாலிபர்கள் மீது குண்டாஸ் சட்டம் பாய்ந்தது!



ராசிபுரம், நவ.28

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் பட்டணம் சாலை அருகே கடந்த 26.10.25 மதுபான கடை மற்றும் சாலைகளில் நடந்து சென்ற பொதுமக்கள் என பலரையும் 3 இளைஞர்கள் கத்தியால் தாக்கிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் பட்டணம் சாலை பகுதியை சேர்ந்த சுப்பிரமணியன் என்பவரது மகன் பிரதீப்(21) தனியார் பொறியியல் கல்லூரியில் பயின்று வரும் நிலையில் ராசிபுரம் உதவி காவல் ஆய்வாளர் சுரேஷ் என்பவரிடம் பாதிக்கப்பட்ட நபர்கள் வழங்கிய புகாரில் 3 இளைஞர்கள் மீது வழக்கு தொடர்ந்து இளைஞர்களை கைது செய்யப்பட்டு சேலம் மத்திய சிறையில் அடைத்தனர்.

இந்த நிலையில் 3 இளைஞர்கள் மீது ஏற்கனவே பல்வேறு குற்ற சம்பவ வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும்,தற்போது பொதுமக்கள் மற்றும் இளைஞர்களை தாக்கிய சம்பவத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விமலா மற்றும் மாவட்ட ஆட்சியர்துர்கா மூர்த்தி ஆகியோர் குண்டாஸ் சட்டத்தின் கீழ் இளைஞர்களை கைது செய்ய பரிந்துரை செய்தனர்.

அதன் பெயரில் ராசிபுரத்தை சேர்ந்த சிராஜுதீன்என்பவரதுமகன்ரியாசுதீன்(24) மற்றும் அவரது தம்பி அஜிபுதீன்(23) மற்றும் வி.நகர் பகுதியை சேர்ந்த ராஜா பாய் என்பவரது மகன் பாபு(23) ஆகிய மூன்று இளைஞர்கள் மீதும் குண்டாஸ் தடுப்பு சட்டமானது பாய்ந்தது.

குண்டாஸ் சட்டம் பாய்ந்த நிலையில் ராசிபுரம் காவல்துறையினர் சேலம் மத்திய சிறையில் அதற்கான நகலை வழங்கினர்.



திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள அண்ராயநல்லூர், டி.புதுபாளையம் கிராமங்களைசேர்ந்த20பேர்பாமகவிலிருந்துவிலகிமுன்னாள்அமைச்சரும்திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் க.பொன்முடி முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.

### “பிரிட்டானியா மில்க் பிக்கிஸ் & டேலண்ட்டட்:

# ‘அடேங்கப்பா கதைகள் 2.0’ – பெற்றோர் குழந்தை கதைநேரம் மீண்டும்!”



பாண்டிச்சேரி, நவ.28–

பிரிட்டானியா மில்க் பிக்கிஸ் மற்றும் டேலண்ட்டட் இணைந்து உருவாக்கிய ‘அடேங்கப்பா கதைகள் 2.0’ முயற்சி, பெற்றோர்–குழந்தை பிணைப்பை கதை சொல்லலின் மூலம் வலுப்படுத்துவதையே முக்கிய இலக்காகக் கொண்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட செயற்கை நுண்ணறிவு உதவியுடன், தமிழ்நாட்டில் உள்ள குடும்பங்கள் தங்கள் வீட்டில் இருக்கும் அன்றாடப் பொருட்களை வைத்து வேடிக்கையான கதைகளை எளிதில் உருவாக்க முடியும். மில்க் பிக்கிஸ் பாக்கெட்டில் உள்ள குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் தனிப்பட்ட கதைகளை உருவாக்கும் வசதியும் வழங்கப்பட்டுள்ளது. இம்முறை, பெற்றோர்களும் குழந்தைகளும் சேர்ந்து உருவாக்கும் கதைகளை வீடியோவாக பதிவு செய்து பகிரலாம்; சிறந்த பதிவுகளைத் தேர்ந்தெடுத்து வாரந்தோறும்பரிசுகள்வழங்கப்படுகின்றன.பிரிட்டானியா நிறுவனத்தின் மார்க்கெட்டிங் பொது மேலாளர் திரு. சித்தார்த் குப்தா கூறுகையில், பல வருடங்களாக மில்க் பிக்கிஸ் தமிழ்நாட்டின் குழந்தைப் பருவ நினைவுகளில் ஒரு பிரியமான அங்கமாக இருந்து வருகின்றது.

### ஆம்பூரில் 3 மாத பெண் குழந்தை தண்ணீர் தொட்டியில் சடலமாக மீட்பு!

## காணாமல் போனதாக கூறப்பட்டநிலையில் போலீசார் விசாரணை!!



ஆம்பூர். நவ.28–

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் பெத்தலேகம் பகுதியில் வாடகை வீட்டின் உள்ள மேல்தளத்தில் வசித்து வருபவர் அக்பர் பாஷா அர்ஷியா தம்பதியினர். அக்பர் பாஷா தனியார் தொழிற்சாலையில் கார் ஒட்டுனராக பணியாற்றி வருகிறார்.

இவர்களுக்கு ஒரு ஆண் ஒரு பெண் குழந்தை உள்ள நிலையில் கடந்த 3 மாதத்திற்கு முன்பு அர்ஃபலா பாத்திமா என்ற பெண் குழந்தைபிறந்ததுள்ளது.

இந்நிலையில் அர்ஃபலா பாத்திமா(3 மாத குழந்தை) வீட்டின் தரை தளத்தில் உள்ள தண்ணீர் தொட்டியில் சடலமாக இருந்ததை தொடர்ந்து குழந்தையின் உறவினர்கள் குழந்தையை, ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற நகர போலிசார்

மேல்மாடியில் வசிக்கும் குழந்தை, நடக்க கூட முடியாத நிலையில் தரைதளத்தில் உள்ள தண்ணீர் தொட்டியில் எப்படி விழுந்தது என கேள்வி எழுப்பினர்.

பின்னர் குழந்தையின் பிரேதத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

சம்பவம் குறித்து போலீசார் வழக்குபதிவு செய்து குழந்தையின் தாய் மற்றும் தந்தையிடம் பல்வேறு கோணங்களில் விசாரணை மேற்க்கொண்டு வருகின்றனர்.

### விழுப்புரம் மாவட்டம் வளவனூரில் உள்ள

# நிழற்குடையில் நிறுத்தப்பட்டுள்ள வாகனத்தால் பயணிகள் அவதி!

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை!!



விழுப்புரம், நவ.28–

கம்யூனிஸ்ட் கட்சி விழுப்புரம் மாவட்டம் விழுப்புரம் (TO) புதுச்சேரி மாநிலம் செல்லும் வழியில் மெயின் ரோட்டில்

வளவனூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ளது பேருந்து நிலையம் பஸ் ஸ்டாப் மற்றும் பொதுமக்கள் நிக்கும் நிழற்குடையில் சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து கட்டப்பட்டுள்ளதா இல்லை மத்திய அமைச்சர் எம் பி நிதியில் இருந்து கட்டப்பட்டுள்ளதா வளவனூரில் இருக்கும் நிழற்குடையில் இன்று பொதுமக்கள் நடந்து செல்வது கூட இடம் இல்லாத நிலையில்

நடைபாதையில் உள்ளது இருசக்கர வாகனங்கள் உள்ளன அனைத்தும் அந்த நிழற்குடையில் நிரந்தரமாக நிறுத்திவிட்டு செ ன்று இருக்கிறார்கள்

வந்து இரு சக்கர வாகன எடுத்துச் செல்லும் என்னம் வாகன உரிமையாளர்கள் இல்லை வளவனூர் பேரூராட்சி நிர்வாகம் பொது மக்களின் நலன் கருதி அகற்றி விட வேண்டும் மற்றும் வளவனூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட காவலர்கள் அந்த வாகனத்தை அப்புறப்படுத்த வேண்டும் மேற்கொண்டு அந்த நிழற்குடையில் மத்தியில் ஏற்கனவே குடிநீர் குழாய் பைப்புகள் புதைக்கப்பட்டுள்ளன இன்னும் அதை சரி செய்யாமல் மேலும் பல்லமாக இருக்கின்றன மழை நீர் தேங்கியும் அசுத்தமாய் உள்ளன கொசுக்கள் உற்பத்தியாகி உள்ளன அந்த பகுதியில் வளவனூர் பேரூராட்சி நிர்வாகம் நிழற்குடையில் உள்ள தரைதலத்தை உயர்த்த வேண்டும்

பொதுமக்கள் அன்றாடம் பயணிக்க கூடிய சூழல் உள்ளதால் அதை சரி செய்ய வேண்டும் சமூக ஆர்வலர் மற்றும் அந்தப் பகுதியில் மக்கள் கோரிக்கையாக உள்ளன .

# மூளைக் காய்ச்சலை தடுக்க முக்கியமான வழி - தடுப்பூசி விழிப்புணர்வு!



சென்னை, நவ.28–

மூளைக்காய்ச்சல் என்பது தடுப்பூசியால் தடுக்கக்கூடிய, குழந்தைகளுக்கு மிக ஆபத்தான ஒரு தொற்று நோயாகும். ஆண்டுதோறும் உலக அளவில் 2.5 மில்லியனுக்கும் அதிகமான மூளைக்காய்ச்சல் நிகழ்வுகள் பதிவாகின்றன. இதில் 70% வரை ஐந்து வயதுக்குக் கீழே உள்ள குழந்தைகளுக்கு காணப்படுகிறது. “இந்த நோயை தடுப்பதில் தடுப்பூசி மிகவும் முக்கியமானது எனசைல்ட் கேர்சென்டர், அண்ணா நகர் கிழக்கு, சென்னை, குழந்தை நல நிபுணர் மற்றும் நுரையீரல் நிபுணர் டாக்டர் ஏ. பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.” “மூளைக்காய்ச்சல் தடுப்பூசி மிகவும் பயனுள்ளதாகும். இது தனிநபர் மட்டுமல்ல, சமூகத்தையும் பாதுகாக்கிறது. குறிப்பாக குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் குறைந்த நோய் எதிர்ப்பு சக்தி கொண்டவர்கள் நேரத்திற்கு ஏற்றபடி தடுப்பூசி எடுக்க வேண்டும்.” இந்திய சிறுவர் மருத்துவர் சங்கம் (IAP) 9–23 மாதங்களுக்கு இரண்டு டோஸ் மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகளுக்கு உயர் ஆபத்து உள்ளவர்களுக்கு ஒரு டோஸ் தடுப்பூசியை பரிந்துரைக்கிறது.உலகளாவிய ரீதியில் இந்த நோயை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உலகசுகாதாரநிறுவனம் (WHO), 2030க்குள்பாக்டீரியா மூலம் ஏற்படும் மூளைக்காய்ச்சல் பரவலை முற்றிலும் ஒழிப்பது இலக்காக கொண்டுள்ளது.

# காரிமங்கலம் வாரச்சந்தையில் ஆடுகள் விற்பனை மந்தம்!

காரிமங்கலம், நவ.26–

காரிமங்கலம் வாரச் சந்தையில் ஆடுகள் விற்பனை மந்தம் காரிமங்கலம், நவ.26, தர்மபுரி மாவட்டம் காரிமங்கலம் வாரச்சந்தை செவ்வாய்க்கிழமை தோறும் நடந்து வருகிறது. இதில் சுற்றுவட்டார பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் தங்களது பல்வேறு கால்நடைகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

நேற்று நடந்த சந்தையில் சுமார் 600 ஆடுகள் 800 மாடுகள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் ஆடுகள் விற்பனை குறைந்து காணப்பட்டது. சுமார் 35 லட்சம் அளவில் ஆடுகள் விற்பனை நடந்தது. 55 லட்சம் அளவிற்கு மாடுகளும் 3 லட்சம் அளவிற்கு நாட்டுக்கோழி விற்பனை நடந்தது. கடந்த வாரத்தை காட்டிலும் கால்நடை வரத்து அதிகரித்து காணப்பட்ட நிலையில் ஆடுகள் விற்பனை மந்தகதியில் இருந்ததாக வியாபாரிகள் தெரிவித்தனர்.



விழுப்புரம் மாவட்டம் மணம்பூண்டியில் உள்ள முகையூர் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் தேசிய அளவிலான பாலின சமத்துவ விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், கொடியசைத்துதுவக்கிவைத்தார்.உடன்முகையூர்வட்டாரவளர்ச்சிஅலுவலர்கள் பாலச்சந்தர் .ஸ்ரீதர், உதவி திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) பாஸ்கரன் உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோயம்புத்தூரில் நடைபெற்ற TN Rising முதலீட்டாளர்கள் மாநாட்டில், 9 தொழில் நிறுவனங்களின் பல்வேறு பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் . என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார், ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல் ஆனந்த், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் திரு வி. அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, டிட்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு சந்தீப் நந்தூரி, தொழில்வணிகஆணையர்இல.நிர்மல்ராஜ்,கோயம்புத்தூர்மாவட்டஆட்சித்தலைவர்பவன்குமார்க.கிரியப்பனவர்,LMWநிறுவனத்தின் செயல் தலைவர் சஞ்சய் ஜெயவர்த்தனவேலு, CRI Pumps நிறுவனத்தின் தலைவர் சவுந்தர ராஜன், சக்தி குழும நிறுவனத்தின் தலைவர் மாணிக்கம், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கள்ளக்குறிச்சி நாரீஸ்வரர் திருக்கோவிலில் ரூ.66 லட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள்!

## கு.செல்வப் பெருந்தகை நேரில் ஆய்வு





கள்ளக்குறிச்சி, நவ.28

தமிழ்நாடு சட்டப்பேரவை பொது கணக்கு குழு தலைவர் கு.செல்வப் பெருந்தகை அவர்கள், சட்டப்பேரவை பொது கணக்கு குழு உறுப்பினர்கள், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன்,B.Sc,MLA,அவர்கள், கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர், தா.உதயசூரியன்,B.Sc,MLA,அவர்கள், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் M.S.பிரசாந்த் IAS, ஆகியோர்கள் ரி

ஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, ரிஷிவந்தியம் ஊராட்சியில், 2000 ஆண்டுகளுக்கு மேல் பழமையான அர்த்த நாரீஸ்வரர் திருக்கோவிலில் ரூபாய்.66 லட்சங்கள் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருப்பணிகளை ஆய்வு மேற்கொண்டு, சாமி தரி

சனம் செய்தனர். மேலும் இந்த ஆய்வின்போது நாடாளுமன்ற உறுப்பினர் மலையரசன்,மாநில,மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள், அரசு துறை சேர்ந்த உயர் அதிகாரிகள், அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் என அனைவரும் உடன் இருந்தனர்.

### விழுப்புரம்

# மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சிறப்பு தீவிர திருத்தம் ஆலோசனைக் கூட்டம்!

## கலெக்டர் தலைமையில் நடைபெற்றது!!



விழுப்புரம் நவ.28

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் ஆலோசனைக்கூட்டம் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில்: இந்திய தேர்தல் ஆணையத்தால் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான அறிவிப்பு 27.10.2025 அன்று செய்யப்பட்டது. விழுப்புரம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் கடந்த 4ந் தேதி முதல் தொடங்கி நடைபெற்று வரும் நிலையில், கணக்கீட்டு படிவங்களை வாக்காளர்களிடமிருந்து விடுபாடின்றி பெறுவது தொடர்பாக அறிவுறுத்தப்பட்டது.

விழுப்புரம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளுக்காக 1970 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டு பணியாற்றி வருகிறார்கள். வாக்காளர்கள் தங்களின் கணக்கெடுப்பு படிவங்களை சரியாக பூர்த்தி செய்ய வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் உதவுவார்கள் என்றும், பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டு படிவங்களை வாக்குச்சாவடி நிலை முகவர்கள் 2 (BLA2) மூலம் திரும்ப பெற உரிய அறிவுரைகள் வழங்கிடுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும், வாக்காளர்களில் முகவரியில் இல்லாதவர்கள், குடிபெயர்ந்தவர்கள், இறந்தவர்கள் (ASD Absent, Shifted, Death) குறித்த விவரத்தினை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் அல்லது வாக்காளர் பதிவு அலுவலர்களிடம் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் 2 (BLA2) கொடுத்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும், படிவங்களை பூர்த்தி செய்வதிலும் திரும்ப பெறுவதிலும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வாக்குச்சாவடி நிலை முகவர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிடவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேலும், சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான சந்தேகம் மற்றும் புகார்களுக்கு சட்டமன்ற தொகுதி கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண்களான மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விழுப்புரம். 1950, 70.செஞ்சி 04145222007, 71.மயிலம் 04147239449, 72.திண்டிவனம் (தனி) 04147222090, 73.வானூர் (தனி) 0413 2677391, 74.விழுப்புரம் 04146222554, 75.விக்கிரவாண்டி 04146233132, 76. திருக்கோவிலூர் 04153252316 ஆகிய தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு பொதுமக்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# இந்தியாவில் விற்கும் கார்களுக்கு குறைந்த அரிப்பு பாதுகாப்பு!

சென்னை,நவ.28

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கார்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் போது 70% க்கும் மேல் துத்தநாக பூச்சு செய்யப்பட்ட எஃகு மற்றும் 6–12 ஆண்டுகள் அரிப்பு எதிர்ப்பு உத்தரவாதத்துடன் கிடைக்கின்றன. ஆனால், உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்காக விற்கப்படும் பெரும்பாலான கார்கள் குறைந்த அளவு பூச்சு மட்டுமே பெறுகின்றன;பெரும்பாலானவற்றுக்குஅரிப்புஎதிர்ப்புஉத்தரவாதம் இல்லை. வாடிக்கையாளர் செலவுகள் மற்றும் பாதுகாப்பு கவலைகள்சாதாரண கார் உரிமையாளர்களுக்கு இது அதிக பழுது செலவுகள், வாகன கட்டமைப்பு விரைவில் பலவீனமாவதும், மறுவிற்பனை மதிப்பின் குறைவாகவும் வெளிப்படுகிறது. நிபுணர்கள் கூறுவதாவது, துத்தநாக பூச்சு வாகன உற்பத்தி செலவில் மிகக் குறைந்த வித்தியாசத்தை மட்டும் ஏற்படுத்தும், ஆனால் ஆயிரக்கணக்கான ரூபாய் பழுது செலவுகளைத் தவிர்க்க முடியும். ILZDA வலியுறுத்தல் மற்றும் உலக தரம்ILZDA வாகன நீண்டகால உறுதித்தன்மைக்கு ஜிங்கின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளது. நிர்வாக இயக்குநர் எல். புகழேந்தி கூறியதாவது, ஏற்றுமதி செய்யப்படும்கார்களுக்குவழங்கப்படும் நன்மைகளை உள்நாட்டுக் கார்களுக்கும் வழங்க வேண்டும். தொழில் ஆய்வாளர்கள் வலியுறுத்துவது: “ஒரு கார் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது என்றால், அது இந்தியாவில் பாதுகாக்கப்படவேண்டும்.

# அப்போலோ டயாலிசிஸ் கிளினிக்கள், IMA கடலூர் இணைந்து CKD விழிப்புணர்வு CME நடத்தினர்!



கடலூர் நவ.28

கடலூர் IMA மண்டபத்தில் நடைபெற்ற இந்த தொடர்ச்சியான மருத்துவக் கல்வி (CME) நிகழ்ச்சியில் 50க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் கலந்து கொண்டு சிறுநீரக நோய் (CKD) பற்றிய விழிப்புணர்வு, ஆரம்பகால கண்டறிதல், தோல் பராமரிப்பு, புரோட்டினூரியா மற்றும் பராமரிப்பாளர் வழிகாட்டுதல் தொடர்பான பயிற்சி பெற்றனர். CME தலைப்பாக “தோல் பராமரிப்பு, மூலிகைகள் மற்றும் புரோட்டினூரியா –ஒவ்வொரு பராமரிப்பாளரும் தெரிந்து கொள்ள வேண்டியது” தேர்ந்தெடுக்கப்பட்டது. பேச்சாளர் டாக்டர் ஏ. வெங்கடேஷ் (M.D, D.M, PostDoctoral Fellowship) சிறுநீரக நோயை முன்கூட்டியே கண்டறிவது மற்றும் சரியான நேரத்தில் தலையீடு செய்யும் அவசியத்தை வலியுறுத்தினார். IMA தலைமை மற்றும் CME ஆதரவு IMA கடலூர் தலைமை CMEஐ ஆதரித்தது. இதில் டாக்டர் எஸ். முகுந்தன் (தலைவர்), டாக்டர் ஆர். வினோத் குமார் (செயலாளர்), டாக்டர் கே. கோபாலகிருஷ்ணன் (பொருளாளர்) முக்கிய பங்காற்றினர். அவர்கள் பங்கேற்பு அறிவுப் பரிமாற்றம் மற்றும் உள்ளூர் மருத்துவர்களை ஈடுபடுத்துவதில் முக்கிய பங்கு வகித்தது.



கோயமபுத்தூர் மாவட்டம் ஆவாரம்பாளையம் பகுதியில் பிரகதி மருத்துவமனையில் தானியங்கி மூட்டு மாற்று அறுவை சிகிச்சை பிரிவினை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் திறந்து வைத்தார். அருகில் மருத்துவமனை நிர்வாகிகள் உள்ளனர்.



சென்னை மாவட்டம், இராயபுரம் சட்டமன்றத் தொகுதி, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை உருது தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற வாக்காளர் உதவி மையத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிக்கான கணக்கீட்டுப் படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் வழிகாட்டுதலுடன் வாக்காளர்கள் பூர்த்தி செய்யும் பணியினை கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/ வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



திருப்பூர் மாவட்டம் தாராபுரம் வட்டம் அலங்கியம் கிராமம் காந்திநகர் 6வது வார்டுக்குட்பட்ட சமுதாய நலக்கூடத்திற்கு பின்புறம்உள்ள 100 குடும்பங்கள் 30 ஆண்டுகளுக்கு மேலாக சாக்கடை வசதி இல்லாமல் வீட்டின் அருகிலேயே கழிவு நீர் தேங்கியுள்ளதால் நோய் தொற்று ஏற்படுவதால் பல ஆண்டுகளாக ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் வட்டார வளர்ச்சி அதிகாரிகளிடம் பலமுறை புகார் மனு கொடுத்தும் நடவடிக்கை எடுக்காததால் அலங்கியம் ஊராட்சியில் தனி அலுவலர் மற்றும் ஊராட்சி செயலாளரிடம் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் சாக்கடை வசதி அமைத்து தருமாறு புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது.

### ஆம்பூர் அருகே

# கார் உதிரி பாகங்கள் திருடிய 4 பேர் கைது; ரூ.13 லட்சம் மதிப்பிலான கார் உதிரி பாகங்கள் ,கார் பறிமுதல்!



ஆம்பூர்.நவ.28

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் மாங்கா தோப்பு பகுதியை சேர்ந்த அர்ஷத் என்பவர் சென்னை ஒரகடம் பகுதியில் உள்ள கமலம் டிரான்ஸ்போர்ட்டில் லாரி டிரைவராக பணியாற்றி வருகிறார். இந்நிலையில் கடந்த 21 ஆம் தேதி அவர் சென்னை ஒரகடத்தில் இருந்து கார் உதிரி பாகங்கள் லாரியில் ஏற்றிக்கொண்டு பெங்களூர் சென்று கொண்டிருந்தார். அப்போது லாரியின் பின்பக்க கதவுகள் உடைக்கப்பட்டு இருப்பது கண்டு அதிர்ச்சியடைந்தார். பின்னர் இது குறித்து அவர் டிரான்ஸ்போர்ட் மேலாளருக்கு தகவல் அளித்துள்ளார். தகவலின் பேரில் டிரான்ஸ்போர்ட் மேலாளர் கண்ணதாசன் ஆம்பூர்கிராமிய காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து அங்குள்ள சிசிடிவி காட்சிகளை ஆய்வு மேற்கொண்டு விசாரணை நடத்தி வந்தனர். அப்போது காரில் வந்தவர்கள் முன்னுக்குபின் முரணான பதில் அளித்துள்ளார். பின்னர் அவர்கள் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று தீவிர விசாரணை மேற்கொண்டதில் அவர்கள் வேலூர் மாவட்டம் குடியாத்தம் கோபாலபுரம் எம்.பி.எஸ் நகர் பகுதியை சேர்ந்த ஜூனத் (22), ஷபிக் முஹம்மத் (19), முஹம்மத் அஹமத் (18), ஹபீபூர் ரஹ்மான் என்றும் இவர்கள் நான்கு பேர் மாதனூர் அருகே தாபாவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லாரியின் பின்பக்க கதவை உடைத்து ரூ.13 லட்சம் மதிப்பிலான கார் உதிரி பாகங்கள் திருடி சென்றதுதெரியவந்தது.இதனைதொடர்ந்து போலீசார் 4 பேரை கைது செய்து அவர்களிடமிருந்து ரூ.13 லட்சம் மதிப்பிலான கார் உதிரி பாகங்கள் மற்றும் கொள்ளை சம்பவத்திற்கு பயன்படுத்திய கார் ஆகிவற்றை பறிமுதல் செய்து அவர்கள் வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

## இந்திய வீடியோ படைப் பாளிகளின் எழுச்சி:

# டிஜிட்டல் பொருளாதாரத்தின் திசையை மாற்றியமைக்கும் 5 முக்கியப் போக்குகள்!




கோயம்புத்தூர், நவ.28

இந்தியாவின் படைப்பாளிப் பொருளாதாரம் இன்று மிக வேகமாக வளர்ந்து வருகிறது; இது வருடத்திற்கு சுமார் $350 பில்லியன் மதிப்புள்ள சந்தைகளில் தீர்மா னிப்புகளை ஏற்படுத்துகிறது மற்றும் 2030க்குள் $1 டிரில்லியனைதாண்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது. மும்பையில் மே2025ல்நடைபெற்ற 'வேவ்ஸ் உச்சி மாநாட்டில்' பிரதமர் நரேந்திர மோடி, “இந்தியாவில் உருவாக்குங்கள், உலகிற்காக உருவாக்குங்கள்” என்று வலியுறுத்தி, நாட்டின் படைப்பாளிகளின் திறன் மற்றும் டிஜிட்டல் ஆற்றலை உலகளவில் மாற்றத்தை ஏற்படுத்தும் முக்கிய சக்தியாக உணர்த்தினார். இந்த படைப்பாளி எழுச்சிக்கு பின்னாலுள்ள முக்கிய சக்தி தரவு. இந்தியாவில் தினமும் டெராபைட் அளவிலான 4K ரீல்கள், நீண்ட நேர லைவ்ஸ்ட்ரீம்கள் உருவாக்கப்படுகின்றன, இது நம்பகமான, விரிவாக்கக்கூடிய மற்றும் பாதுகாப்பான ஸ்டோரேஜ் அமைப்பின் தேவையை வலியுறுத்துகிறது. WD Red® Plus மற்றும் Pro NAS HDDs போன்ற நெட்வொர்க் அட்டாச்டு ஸ்டோரேஜ் (NAS) தீர்வுகள், மற்றும் GDRIVE® மற்றும் GRAID® போன்ற நேரடியாக இணைக்கக்கூடிய DAS சாதனங்கள், பலர் ஒரே நேரத்தில் தரவைப் பகிர்ந்து, பாதுகாப்பாக சேமித்து, அதிவேகத்தில் எடிட் செய்ய உதவுகின்றன. பிரதமர் நரேந்திர மோடி பேசியதை போல, தரவு மற்றும் ஸ்டோரேஜ் இணைந்து, இந்தியாவின் கதைகளைஉலகத்துடன்இணைக்கும்சக்தியாகஇருக்கின்றன.



புதுக்கோட்டை மாநகராட்சிக்கு உட்பட்ட மேட்டுப்பட்டி சிறுவாபட்டி கிராமத்தில் பூர்த்தி செய்யப்பட்ட ஷிமிஸி படிவங்களை வீடு வீடாக சென்று திமுக மாவட்ட துணை அமைப்பாளர் மேட்டுப்பட்டி சின்னதுரை சேகரித்து தேர்தல் பணி அலுவலர் மற்றும் வட்டாட்சியர் செந்தில் நாயகியிடம் வழங்கினார் . உடன் திமுக நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் உள்ளனர்

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



திருப்பத்தூர் நகராட்சியில்

# மாற்றுத்திறனாளிகளுக்கான நகர மன்ற உறுப்பினர் நியமன ஆணை!

## நல்லதம்பி எம்.எல்.ஏ. வழங்கினார்!!

திருப்பத்தூர் நவ.28

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் நகராட்சியிலுள்ள 36 வார்டுகளில் வார்டு உறுப்பினர்கள் உள்ளனர். மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளை ஏற்று தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஏற்கனவே உத்தரவு பிறப்பித்தார். அதன் அடிப்படையில், திருப்பத்தூர் நகராட்சியின் மாற்றுத் திறனாளிகள் பிரிவு உறுப்பினராக கே. வீரமணி தேர்வு செய்யப்பட்டார். அவருக்கான பதவிநியமனச் சான்றிதழை திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர்நல்லதம்பி, நகரமன்ற உறுப்பினர் சங்கீதா வெங்கடேசன், நகராட்சி ஆணையாளர் மற்றும் நகர செயலாளர் ராஜேந்திரன் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெங்கடேசன் ஆகியோர் வழங்கினர். இந்த நிகழ்வில் கலந்து கொண்ட கே. வீரமணி, எங்களைப் போன்ற மாற்றுத்திறனாளிகளுக்கும் இப்படியான முக்கிய வாய்ப்புகளை வழங்கிய தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள், என்று தெரிவித்தார். இந்நிகழ்வில் நகராட்சி அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பலரும் பங்கேற்றனர்.

அரசு ஊழியர்கள் சங்கம் சார்பில்

# டிசம்பர் 4ல் மாபெரும் மறியல் போராட்டத்திற்கான ஊழியர்கள் சந்திப்பு பிரச்சாரம்!

ஓசூர்,நவ.28

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை தாலுக்கா அலுவலகம் முன்பாக அரசு ஊழியர்கள் சங்கம் வரும் டிசம்பர் மாதம் 4 ஆம் தேதி நடைபெறும் மாபெரும் மறியல் போராட்டத்திற்காக ஊழியர்கள் சந்திப்பு பிரச்சாரம் மாவட்ட இணை செயலாளர் முருகேசன் தலைமையில் நடைப்பெற்றது இதில் மாநில துணை பொது செயலாளர் குபேரன் சிறப்புறையாற்றினார். வருவாய் துறை அலுவலர்



சங்க மாவட்ட தலைவர் சக்திவேல் துவக்கி வைத்தார்,

மேலும் துணை பொதுச் செயலாளர் குபேரன் பேசுகையில் திமுக அரசு தேர்தலுக்கு

முன்னர் ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்ற முடியாத திமுக அரசை எதிர்த்தும், கண்டித்தும், வரும் டிசம்பர் 4 ல் மாவட்ட தலைநகரில் மறியல் நடைப்பெறும். மேலும் கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் 2026 ஜனவரி முதல் வாரம் காலவரையற்ற

வேலை நிறுத்த போராட்டம் மேற்கொள்வோம் என்று எச்சரிக்கையாகவே தமிழக அரசுக்கு கூறுகிறோம் என்று பேசினார்.



# வாணியம்பாடி உதயேந்திரம் பேரூராட்சியில் நியமன உறுப்பினர் பதவியேற்பு விழா!

## ஆம்பூர் எம்.எல்.ஏ. பங்கேற்பு!!

வாணியம்பாடி, நவ.28

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த உதயேந்திரம் பேரூராட்சியில் நியமன உறுப்பினர் பதவி ஏற்பு விழா அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பேரூராட்சி மன்ற தலைவர் ஆ.பூசாராணி தலைமை வகித்தார். செயல் அலுவலர் ராஜலட்சுமி (பொறுப்பு), பேரூர் திமுக செயலாளரும், வார்டு உறுப்பினருமான ஆ.செல்வராஜ், துணைத் தலைவர் கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் அம்பலவாணன் நியமன உறுப்பினராக பதவி ஏற்றுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.சி.வில்வநாதன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டு நியமன உறுப்பினராக ஏற்றுக்கொண்ட அம்பலவாணனுக்கு சால்வை அணிவித்து வாழ்த்தினர். இதில் பேரூர் திமுக பொருளாளர் மீர் முகமதுகனி, மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு துணைத் தலைவர் அசோகன், மாவட்ட பிரதிநிதி மேகனாதன், மன்ற உறுப்பினர்கள், கட்சி நிர்வாகிகள், அலுவலக பணியாளர்கள் உட்பட பலர் கலந்துக் கொண்டனர். பேரூராட்சி செயலாளர் குமார் நன்றி கூறினார்.

பள்ளிக்கல்வித்துறையில் புதுமையான திட்டங்களை செயல்படுத்தி

# கல்வி வளர்ச்சியில் முன்னணி வகிக்கும் திராவிட மாடல் அரசுக்கு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் பாராட்டு!

புதுக்கோட்டை நவ 28

பு தமிழ்நாடு முதல்வராக மு க ஸ்டாலின் அவர்கள்பொறுப் பேற்றதில் இருந்து பள்ளிக் கல்வித்துறையில்புதுமையானதிட்டங்களை செயல்படுத்தி கல்வி வளர்ச்சியில் முன்னணி வகிக்கும் மாநிலமாக தமிழ்நாடு சிறப்பாக செயல்பட்டு வருவதற்கு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொரோனா களத்தில் ஏற்பட்ட கற்றல் இழப்புகளை சரி செய் வதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலி ன் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் பள்ளிக்கல்வித்து றையில் இல்லம் தேடி கல்வித் திட்டத்திற்காக 2021 22 முதல் 202425 வரை ரூ 660.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 1.65 லட்சம் தன்னார்வலர்களும், 95.97 லட்சம் மாணவர்களும் பயனடைந்துள்ளனர். அதனைத் தொடர்ந்து 202425 ஆம் கல்வி ஆண்டில் இல்லம் தேடி கல்வித் திட்டம் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருகின்றன.

இதன்மூலம் 7.97 லட்சம் மாணவர்கள் பயன்பெற்று வருகின்ற னர்.வாசிப்பு இயக்கத்தின்மூலம் அன்றாட வாசிப்பு பழக்கத்தை குழந்தைகளிடம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக வா சிப்பு இயக்கம் ஒரு முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்பட் டு வருகிறது.

இலக்கிய திருவிழாக்கள், இளைஞர் இலக்கிய திருவிழா, சிறந்த கற்போர் மையங்களுக்கு விருதுகள், புதிய எழுத் தறி வு திட்டம், திசிறைவாசிகளுக்கான சிறந்த எழுத்தறிவு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை பள்ளி கல்வித்து றையில் சிறப்பாக செயல்படுத்தி தமிழ்நாடு கல்வியில் முன்னணி மாநிலமாக திராவிட மாடல் ஆட்சியில் திகழ்வதற்கு மாற்று த்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் தமிழ்நாடு முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களுக்கும் , துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.



நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம் பாதரை ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.



செயிண்ட் தாமஸ் மவுண்ட் உள்ள கண்டோன்மென்ட் விளையாட்டு மைதானத்திற்கு சென்னை மற்றும் மதுரையில் நடைபெறவுள்ள 14 வது ஜூனியர் ஹாக்கி உலக கோப்பை விளையாட்டுப் போட்டிகள் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் "Trophy Tour" என்கிற தலைப்பில் ஹாக்கி விளையாட்டு உலகக் கோப்பையை, ஹாக்கி விளையாட்டு வீரர்கள் அறிமுகப்படுத்தினர். உடன் மாவட்ட விளையாட்டு அலுவலர் கோ.சாந்தி உள்ளார்.

# மகளிர் திட்டம் மூலம் கடனுதவித் தொகை பெற்ற தென்காசி மாவட்ட பயனாளிகள் முதலமைச்சருக்கு மனம் நிறைந்த நன்றியை தெரிவித்தனர்!

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) என்பது 2012 13 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் ஒரு திட்டமாகும். இதன் முக்கிய நோக்கம், ஊரகப் பகுதிகளில் வாழும் ஏழை, மிகவும் ஏழை, நலிவுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் போன்றோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதாகும். வலுவான சமூக அமைப்புகளை உருவாக்குதல், நிதி மற்றும் பிற சேவைகளை அணுகுவதற்கும், குடும்ப வருமானத்தை பெருக்குவதற்கும் இவ்வியக்கம் உதவுகிறது.



தமிழ்நாடு முதலமைச்சர் தென்காசி மாவட்டத்தில் 29.10.2025 அன்று நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் தென்காசி மாவட்டத்தைச் சார்ந்த 5213 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.42.62 கோடி தொகை வங்கி கடனாகவும், 1425 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு 6.28 கோடி தொகை நலிவுற்றோர் குறைப்பு நிதியாகவும், 1182 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு 2.67 கோடி தொகை நலிவுற்றோர் குறைப்பு நிதியாகவும், 164 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு 1.02 கோடி தொகை நுன் நிறுவன நிதிக்கடனும், 482 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு 2.98 கோடி தொகை வாழ்வாதார நிதி மற்றும் 24,800 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு மகளிர் சுய உதவிக் குழு அடையாள அட்டை என மொத்தம் 33,266 மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு ரூ.55.51 கோடி மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) மூலம் பயனடைந்த பயனாளிகள் தெரிவித்ததாவது,

திருமதி.அமுதா, ஊத்துமலை, தென்காசி மாவட்டம்.

என் பெயர் அமுதா. எனது சொந்த ஊர் தென்காசி மாவட்டம் ஆலங்குளம் தாலுகாவில் உள்ள ஊத்துமலை. கலைமகள் மகளிர் சுயஉதவிக்குழுவில் உறுப்பினராக உள்ளேன். எனக்கு வயது 45. என் கணவர் பெயர் சேட் துரை. என் கணவர் கூலிவேலை செய்து வருகிறார். எனக்கு 2 ஆண் குழந்தைகள். இருவரும் பள்ளியில்படித்து வருகிறார்கள். என் கணவர் பார்க்கும் வேலையின் வருமானம் எங்களின் குடும்ப வாழ்கைக்கு போதவில்லை.

பசங்களின் பள்ளிபடிப்புக்கு என்ன செய்வதென்று யோசிக்கும் போது கலைமகள் மகளிர் சுயஉதவிக்குழுவில் உள்ள மகளிருக்கு தொழில் கடன் வழங்குவதாக தெரிய வந்தது. அதன் பிறகு மகளிர் திட்டத்தின் மூலம் கடன் விண்ணப்பம் தகுந்த ஆவணங்களுடன் வங்கியில் கொடுக்கப்பட்டது. அதில் எனக்கு ஒரு லட்சம் ரூபாய் கிடைத்தது. அதை வைத்து ஒரு தையல் கடை தொழில் துவங்கி 2 மிஷின் வாங்கி எனது வாழ்வாதாரத்தை பெருக்கியுள்ளேன். எனது வாழ்வாதாரம் முன்



னேற்றம் அடைய வழிகாட்டிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் கடனுதவி வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினை மனமார தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி.ருக்மணி, இனாம்வெள்ள கால், தென்காசி மாவட்டம்.

என் பெயர் ருக்மணி. நான் இனாம்வெள்ளகால் ஊராட்சியில் காமாட்சியம்மன் மகளிர் சுய உதவிக் குழுவில் ஊக்குனராக உள்ளேன். நான் சிறிய மளிகை கடை நடத்தி வந்தேன்.அதன் மூலம் மாத வருமான்ம் ரூ.4000 கிடைத்தது. இந்த வருமா



னம் என்னுடைய குடும்பத்திற்கு போதுமானதாக இல்லை. தற்போது மகளிர் திட்டத்தின் மூலம் தொழில் முனைவோர் திட்டம் பற்றி அறிந்தேன். அதன்படி மகளிர் திட்டத்தின் மூலம் தொழில் முனைவோர் கடன் பற்றி அறிந்தேன்.


அதன்படி மகளிர் தொழில் முனைவோர் கடன் விண்ணப்பம் பூர்த்தி செய்து ரூ.200000 கடன் உதவி கேட்டு இந்தியன் வங்கியில் பாவூர்சத்திரம் கிளையில் சமர்ப்பித்தேன். இந்தியன் வங்கி பாவூர்சத்திரம் கிளையின் மூலம் 1,89,000 கடன் உதவி தொகை வழங்கப்பட்டது. இத்தொகையின் மூலம் என்னுடைய மளிகை கடையை விரிவுபடுத்தி கூடுதலாக மளிகை பொருள்களை வாங்கி விற்பனை செய்து வருகிறேன். அதன் மூலம் மாத வருமானம் ரூ.9000 கிடைக்கிறது. இக்கடனுதவி மூலம் என்னுடைய வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது. இந்த வாய்ப்பினை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் ஏற்படுத்தி தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துகொள்கிறேன்.

**வெளியீடு : பெ.சா. கருப்பண ராஜவேல்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**தென்காசி மாவட்டம்.**

# 'நியூட்ரிலைட் வைட்டமின் டி பிளஸ் போரோன்' ஆம்வே இந்தியா அறிமுகம்!

கோவை, நவ.28

இன்றைய வாழ்க்கை முறையின் விளைவாக ஏற்படும் ஊட்டச்சத்து குறைபாடுகளின் காரணமாக ஆரோக்கியமான வாழ்க்கையை அடைவதற்காக முழுமையான நல்வாழ்வை நோக்கி நுகர்வோர் திரும்புகின்றனர். வைட்டமின் டி பற்றாக்குறை என்பது ஒரு அமைதியாகப் பரவும் தொற்று நோய் ஆகும், இது பல் வேறுவயதுடையமக்களைத் தொடர்ந்து பாதிக்கிறது. ஊட்டச்சத்துக் குறைபாடுகளை முன்கூட்டியே நிவர்த்தி செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை இது வலியுறுத்துகிறது. இந்த அறிமுக நிகழ்ச்சியில் பேசிய ஆம்வே இந்தியாவின் நிர்வாக இயக்குநர். ரஜ்னீஷ் சோப்ரா கூறுகையில் "இன்றைய வேகமான உலகில் மாறிவரும் வாழ்க்கை முறைகளினாலும், உடலுக்குத் தேவையான



சூரிய ஒளி குறைவாகக் கிடைப்பதனாலும் இந்தியா முழுவதும் வைட்டமின் டி குறைபாடு என்பது குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருகிறது. சுமார் 8090% இந்தியர்களுக்கு வைட்டமின் டி போதுமான அளவுக்கு இல்லை என்றும் இது காலப்போக்கில் எலும்புகளையும் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் மோசமாக பாதிக்கும் என்றும் ஆய்வுகள் தொடர்ந்து எடுத்துக்காட்டுகின்றன. இவ்வாறு எலும்பு ஆரோக்கியத்தை உள்ளிருந்து உருவாக்கும் ஒரு தனித்துவமான மூன்று அடுக்குப் பாதுகாப்பு அமைப்பை உண்டாக்குகிறது. நியூட்ரிலைட் வைட்டமின் டி பிளஸ் போரான் நியூட்ரிலைட்டின் 90+ ஆண்டுகால ஊட்டச்சத்து நிபுணத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. எலும்புகளுக்கு ஆரோக்கியத்தை வழங்கும் மூலப்பொருட்களைக் கொண்டு அறிவியல்பூர்வமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

# மாற்றுத்திறனாளி உறுப்பினர் நியமன பதவியேற்பு விழா!



வத்தலகுண்டு,நவ.28

வத்தலகுண்டு அருகே உள்ள பட்டிவீரன்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் மாற்றுத்திறனாளி உறுப்பினருக்கான நியமன பதவியேற்பு விழா நிகழ்ச்சி நடந்தது. தமிழக உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளை கவுன்சிலராக நியமிக்கும் மசோதா சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்டதன் தொடர்ச்சியாக முதல் மாற்றுத்திறனாளி கவுன்சிலராக நியமிக்கப்பட்ட வாசவன் பதவியேற்பு நிகழ்ச்சி நடந்தது.

இந்நிகழ்ச்சிக்கு பேரூராட்சி மன்ற துணைதலைவர் கல்பனா தேவிஅருண்குமார் தலைமை தாங்கினார். பேரூர் செயலாளர் அருண்குமார் கிழக்கு ஒன்றிய செயலாளர் கனகதுரை ஆகியோர் முன்னிலை வகித்தார்.செயல் அலுவலர் கோபிநாத் வரவேற்று பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

மாற்றுத்திறனாளி நியமன உறுப்பினராக பதவியேற்ற வாசவனுக்கு வாசனுக்கு பேரூராட்சி மன்றத்தின் சார்பாக சால்வை அணிவித்து வாழ்த்து கூறினர். இந்நிகழ்ச்சியில் பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள்,அலுவலக பணியாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.